


**29. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் செஷல்ஸ் நாடு பயணத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் புறப்பட்டார்.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வலியுறுத்தியுள்ளார்.
- கரூர் சட்டமன்ற தொகுதியிலிருந்து அஇஅதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. M. R. விஜய பாஸ்கர் தனது பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.
- தமிழ்நாட்டில் MBBS BDS மருத்துவ படிப்புகளில் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.
- FIFA உலககோப்பை கால்பந்து நாக்அவுட் சுற்றுகள் இன்று தொடங்கின.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் செஷல்ஸ் நாடு பயணத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் புறப்பட்டார்.

முன்னதாக இன்று விக்டோரியாவில் அமைந்தள்ள நவசக்தி விநாயகர் கோவிலில் பிரதமர் வழிபாடுகளை மேற்கொண்டார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து அங்குள்ள அமைதி பூங்காவில் மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கும் பிரதமர் மலரஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக செஷல்ஸ் நாட்டின் சுதந்திர தின பொன்விழா கொண்டாட்டத்தில் நேற்று பங்கேற்ற பிரதமர் இந்நிகழ்வு தமக்கு பெருமகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டார்.

செஷல்ஸ் நாட்டின் கவுரவ விருந்தினராக பங்கேற்கும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

செஷல்ஸ் நாடு, பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு, நீலக்கடல் மண்டலத்தின் காவலர் என்ற சிறப்பு மிகு விருதை வழங்கி கௌரவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

நாட்டின் முப்படை வீரர்களுக்கு, வீர தீர செயல்களுக்கான உயரிய விருதுகளை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பாதுகாப்பு படை, மத்திய ஆயுத காவல்படை, மாநில யூனியன் பிரதேச காவல் துறை வீரர்கள் குடியரசு தலைவரிடமிருந்து விருதுகளை பெறுகின்றனர்.

முதற்கட்டமாக கடந்த 8-ம் தேதி முப்படையினருக்கு விருதுகள் வழங்கப்பட்ட நிலையில் 2-வது கட்டமாக இன்றுமாலை இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் பங்கேற்ற உயர்நிலைக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மாவட்ட நிர்வாகங்கள் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

வெளிப்படையான முறையில் அரசு நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் கையாளப்பட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களும் உயரதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

2 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தின் ஒருபகுதியாக இன்று பிற்பகலில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் முதலமைச்சர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

நாளை வனத்துறை அதிகாரிகளுடன் சுற்றுச்சூழல், காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வது குறித்தும் முதலமைச்சர் விரிவாக விவாதிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மல்லிகார்ஜுன கார்கே

காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மாநிலங்களவை உறுப்பினராக இன்று பதவியேற்றார்.

கர்நாடக மாநிலத்திலிருந்து உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவருக்கு மாநிலங்களவை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு, சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா,

மூத்த காங்கிரஸ் தலைவர்கள் திருமதி. சோனியா காந்தி, திருமதி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே. பி. நட்டா பல்வேறு டிஜிட்டல் சுகாதார திட்டங்களை புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

2-ம் கட்ட ஆரோக்கிய சேது செயலி உள்ளிட்டவை இதில் அடங்கும்.

நாட்டில் குழந்தைகளின் முதல் 3 ஆண்டு கால மூளை வளர்ச்சி, ஊட்டச்சத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

காந்தி ராஜ்

தமிழகத்தில் கூட்டுறவு வாரம் 2026-ஐ மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. காந்திராஜ் சென்னையில் இன்று துவக்கி வைத்தார்.

வரும் 6-ம் தேதிவரை நடைபெறும் கொண்டாட்டத்தை ஒட்டி அனைத்து கூட்டுறவு அலுவலகங்கள் மற்றும் சங்கங்களில் உறுதிமொழி ஏற்புடன் இந்நிகழ்வு இன்று தொடங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

M. R. விஜயபாஸ்கர்

அஇஅதிமுகவை சேர்ந்த கரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. M. R. விஜயபாஸ்கர் தனது பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் சட்டப்பேரவை தலைவர் திரு. J.C.D. பிரபாகரை சந்தித்து தமது பதவி விலகல் கடிதத்தை வழங்கினார்.

ஏற்கனவே 5 அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

MBBS BDS

தமிழ்நாட்டில் MBBS BDS படிப்புகளில் சேர விரும்பும் மாணாக்கர் இன்றுமுதல் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என மருத்துவ கல்வி இயக்குநரகம் அறிவித்துள்ளது.

விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இதேபோல் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைவு சட்டக் கல்லூரிகளில் 3 ஆண்டு L. L. B. பட்டப்படிப்பிற்கு இன்று முதல் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரேமலதா

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி. பிரேம லதா விஜயகாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

300-க்கும் மேற்பட்ட மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

மாணாக்கரிடையே பேசியஅவர், போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தி.மு.க. ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தி.மு.க. மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடைபெற்றது.

மாநில மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. சரத்குமார் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து தி.மு.க. சார்பில் இப்போராட்டம் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஈரோடு

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் விளாமுண்டி வனப் பகுதியில் இருந்து வெளியேறிய சிறுத்தை கிராமப்பகுதிகளில் நடமாடுவதை வனத்துறையினர் உறுதி செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை மாவட்டத்தில் கொத்தடிமை தொழிலாளர்கள் கண்டறியப்பட்டால் சம்மந்தப் பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

காரைக்கால் அம்மையர் திருக்கோவில் மாங்கனி திருவிழாவில் பிச்சாண்டவர் வீதி உலா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

சுவாமி தரிசனத்திற்கு பின்னர் பக்தர்கள் மாங்கனிகளை வீதிகளில் இறைத்து தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஹரித்ரா நதி தெப்பக்குளத்தில் தெப்பத்திருவிழா இன்றிரவு நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78.81 அடியாக இன்று குறைந்துள்ளது.

அணைக்கு வினாடிக்கு 158 கன அடி நீர் வந்து கொண்டிருக்கும் நிலையில் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 3 ஆயிரம் கனஅடியாக இன்று அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 300 கனஅடி நீர் வந்துகொண்டிருக்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வடக்கு கடலோர தமிழகம் முதல் குமரிக்கடல் பகுதிகள் வரை காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக கோவை, திருப்பூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், ஈரோடு, தேனி

மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

டெல்டா மாவட்டங்கள் வட தமிழகத்தின் ஓரிரு பகுதிகளில் மிதமான மழைக்கும் வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

FIFA உலககோப்பை கால்பந்து நாக்அவுட் சுற்றுகள் இன்று தொடங்கின.

கலிபோர்னியாவில் இன்று நடைபெற்ற போட்டியில் கனடா – தென்னாப்பிரிக்காவை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

ஹுஸ்டனில் இரவு பத்தரை மணிக்கு நடைபெறும் போட்டியில் பிரேசில் – ஜப்பானை எதிர்கொள்கிறது.

நாளைய ஆட்டங்களில் நெதர்லாந்து – மொராக்கோவையும்,

ஜெர்மனி – பராகுவேயையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் செஸ்டர் லே ஸ்ட்ரீட்-ல் நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கு இடையே ஐந்து 20-20 போட்டிகள்

3 ஒருநாள் போட்டிகள் வரும் 19-ம் தேதிவரை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖